4th February 1966]

Power Projects

* 92 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of Power Projects that are under negotiations with the neighbouring State Governments; and

(*b*) the present stage of the negotiations ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The Hoganekkal Hydro-Electric Scheme to harness the power potential of the Cauvery has been taken with the Government of Mysore.

(*b*) The Madras State Electricity Board has prepared a Revised Scheme, a copy of which has been sent to the Central Water and Power Commission and Government of India for approval and to the Government of Mysore also.

திரு. வை. சங்கரன் : அது எந்த அளவில் இருக்கிறது? இன்னும் எத்தனை ஆண்டிற்குள் முடிந்துவிடும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதில் எந்தவிதமான முடிவும் ஏற்படவில்லை. எப்போது ஏற்படும் என்றும் சொல்வதற்கில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முடிவு ஏற்படாமல் இருப்பதற்குக் காரணம் மைசூர் அரசாங்கம் சம்மதம் தெரிவிக்காததாலா ? இதில் மத்திய அரசாங்கம் முடிவு எடுக்க முடியாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மைசூர் அரசாங்கப் பொறுப்பில் இருக்கிறது. அவர்கள் ஒத்துக்கொண்டால் தான் செய்ய முடியும். மைசூர் அரசாங்கத்திற்கும் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கும் அனுப்பி இதில் அவர்கள் மைசூர் அரசாங்கத்திற்குச் சொல்லி ஒத்துழைக்கச் செய்யும்படி கேட்டிருக்கிறோம்.

திரு மீ. கலியாணசுந்தரம் : இதுபோன்று கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையில் இருக்கக் கூடிய திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பேச்சு வார்த்தையில் இருந்தால் குறிப்பிட்டிருப்பேன். அவர்களோடு பேச்சு வார்த்தையில் இருந்த பாண்டியாறு—புன்னப்புழாத் திட்டம் அவர்கள் சம்மதித்ததன் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது.

திரு. வை. சங்கரன் : ஹொகனகல் திட்டத்தின் மூலம் நமக்கும் அவர்களுக்கும் கிடைக்கக் கூடிய பலன் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தத் திட்டத்தின் மூலம் 800 மெகவாட் மின்சார சக்தி கிடைக்கும். அதுவும் குறைந்த செலவில் கிடைக்கும். மூலதனச் செலவும் குறைவு. ஒரு அணையும்

[4th February 1966

பவர் ஸ்டேஷனும் போட்டால் போதும். அதில் நமக்கு 400 மெகா வாட் என்றும், அவர்களுக்கு 400 மெகவாட் என்றும் எடுத்துக் கொள்ளலாம் என யோசனை கூறியிருக்கிறேம்.

9-00 உ.ப. திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த மின்சாரத்தை நீண்டதூரம் கொண்டு செல்வதின் காரண மாக ஏற்படுகின்ற சேதாரத்தைத் தவிர்க்கின்ற முறையிலே அண்டை மாநிலங்களிலிருந்து ஒரு பகுதியிலே வாங்கிக்கொண்டு மற்றொரு பகுதியிலே கொடுப்பதன் மூலமாக ஏற்பாடு செய்து கொள்ள முடியும். நம்முடைய மாநிலத்திலே அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அவை இப்பொழுது அமலில் இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்ய அமைப்பு சரியல்ல. நம்முடைய ராஜ்யத்தில் உள்ள மின்சாரத் திட்டங்கள் எல்லாம் மேற்குப் பகுதியில்தான் இருக்கின்றன. அதைப்போல் நம்முடைய அண்டை மாநிலங்களிலுள்ள திட்டங் களும் நம்முடைய ராஜ்யத்தை சுற்றிலுற்போல் அமைத்திருக்கின் றன. ஆகையால், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கின்ற முறை வேறு நாடுகளில் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அங்கே மின்சாரத்தை மாற்றிக்கொள்வதற்கு உதவிசெய்கிறது. நம் நாட் டினுடைய அமைப்பு அதற்கு உதவியாக இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான்கு மாநிலங்களும் சேர்ந்து ஒரு பொது கிரிட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மைசூருக்கும் நமக்கும் அனுகூலமான முறையில்தான் திட்டம் தயாரிக்கப்பட் டிருக்கிறது. அப்படியிருந்தும் மைசூர் அரசாங்கம் கூறக்கூடிய ஆட்சேபணை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் முடியாது என்று சொல்லிவிடவில்லை. பரிசீலனை செய்துகொண்டிருக்கிறேம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஹோகனக்கல் திட்டத்திலே நீர்ப்பாசனத்திற்கும் ஏதேனும் திட்டம் சேர்க்கப் பட்டு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பேச்சுவார்த்தை மூலமாக வாங்கும்பொழுது நாம் பெறுகின்ற மின்சாரத்திற்கு கட்டணம் கொடுக்கப்படுகிறதா ? அல்லது திருப்பி மின்சாரத்திற்கு மின்சாரமே கொடுக்கப் படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கட்டணம் செலுத்தி, விலை கொடுத்துத்தான் வாங்குகிறேம்.

4th February 1966]

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த ஹொகனக்கல் திட்டம் வந்த பிறகு நம்முடைய மாநிலத்தில் உள்ள மின்சாரத் தேவை பூர்த்தி யாகி விடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் மின்சாரத் தேவை பூர்த்தியாக வேண்டுமென்று நான் நினைப்ப தில்லை. என்றைக்கு நம்முடைய மின்சாரத் தேவை பூர்த்தியாகின் றதோ அன்றைக்கு நம்முடைய முன்னேற்றமும் பூர்த்தியாகிவிடும். ஆகையால், நமக்கு இன்னும் நிறைய மின்சாரம் தேவையாக இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தற்சமயம் ஏற்பட்டிருக்கின்ற மின்சாரக் குறையைப் போக்குவதற்காக அண்டை மாநிலத் திலிருந்து எவ்வளவு மின்சாரம் தரப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மைசூர் மாநிலம் நமக்கு 23 லட்சம் மெகவாட்ஸ் மின்சாரம் தருவதாக ஒப்புக்கொண்டிருக் கிறது. ஆனால் பல தொழில் நுணுக்க சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினாலே 14 அல்லது 15 லட்சம் மெகவாட்ஸ் மின்சாரம் தான் தந்துகொண்டிருக்கிறது. சில நாட்களிலே அங்கே ஏதாவது பழுது ஏற்பட்டுவிட்டால் நம்மிடமிருந்து பவர் கொடுக்கப் படுகிறது. இப்பொழுது கடந்த 2, 3 நாட்களாக 20 லட்சம் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. சி. பொன்னுசாமி : இந்த ஹோகனக்கல் திட்டம் ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக பரிசிலனையில் இருந்துகொண்டிருக் கிறது என்று சொல்லுகிறார்கள் இதில் என்ன சிக்கல் இருக்கிறது ? இதனால் அவர்களுக்கு ஏதாவது பின்னால் வசதி ஏற்படும் என்று நினைக்கிறார்களா ? அல்லது முழுவதும் அவர்களுக்கு பின்னால் வேண்டியிருக்கும் என்று கருதுகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மைசூர் ராஜ்யத்திலே என்ன பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பதில் சொல்லமுடியாது. அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அவர்கள் என்ன காரணத்தால் இதை வைத்துக்கொண்டு இருக் கிறார்கள் என்று சொல்வது என்னால் இயலாது.

திரு. ஆ. துரையரசன் : கேரள ராஜ்யத்துடன் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதால் மேலும் நமக்குக் கிடைக்கின்ற நன்மைகள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீலகிரி ஜில்லாவில் மேற்குப் பகுதியில் ஓடுகின்ற ஒரு நதியைத் தடுத்து அங்கே ஒரு மின்சார நிலையம் ஏற்படுத்தி மின்சாரம் உற்பத்திசெய்த பிறகு அந்தத் தண்ணீரை மறுபடியும் கேரளாவின் உபயோகத்திற்குக் கொடுத்து விடுவது என்று ஒப்பந்தம் செய்து இருக்கிறோம்.

[4th February 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : தற்சமயம் இருக்கும் மின்சார வெட்டு இன்னும் எவ்வளவு நாட்களுக்கு நீடிக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கடவுளைப் பொறுத் தது. மழை பெய்துவிட்டால்—ஏப்ரலிலே கூட நீலகிரியிலே மழை பெய்வதுண்டு —மின்சார வெட்டு இருக்காது. ஒன்று, இரண்டு சிறு மழை பெய்துவிட்டால் கூட இப்பொழுது இருக்கிற வெட்டை வைத்துக்கொண்டே சமாளித்துவிடலாம். மழையே இல்லா விட்டால் மேற்கொண்டு வெட்டு வரக்கூடிய நிலையும் ஏற்படும்.

திரு. சி. பொன்னுசாமி : ஹொக்னக்கல் திட்டம் முடிந்துவிடும் என்று அமைச்சர் அவர்கள் நம்புகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்பிக்கையில்லாவிட்டால் இதனை நாங்கள் வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்க மாட் டோம். நான் எப்பொழுதும் நம்பிக்கையை இழப்பது கிடையாது.

திரு. ஜே. மாதா கவுடர் : பாண்டியாறு புன்னப்புழா எந்த மாவட்டத்தில் உற்பத்தியாகிறது என்று சொல்லமுடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினருடைய மாவட்டத்தில்தான் உற்பத்தியாகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : அப்படியென்றால் அங்கே கூடலூர் பகுதியிலே நம்முடைய எல்லைக்குள்ளேயே ஒரு மின்சார நிலையம் ஏற்படுத்தப்படுமா ? அல்லது வேறு எங்காவது ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய பகுதியில் தான் நிறுவப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குகின்ற வகையில் தனியார் யாராவது அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த முன்வந்தால் அதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி யாரும் முன் வருவார்களா என்பது சந்தேகம். ஒரு காலத்தில் அப்படிச் செய் யப்பட்டது. ஆனால், அப்பொழுது; எல்லாம் மலிவான விலைக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தது. இப்பொழுது ஒரு அனல் மின்சார நிலையம் நிறுவுவதற்கு ஏராளமான செலவு ஆகும். அதன் மூலம் மின்சாரம் கொடுப்பதாக இருந்தால் யூனிட் 8 பைசா; 9 பைசா ஆகிவிடும். நாம் இப்பொழுது ஹெச். டி. ரேட் 5 பைசா வுக்குத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதைத்தவிர இது 'ஹைப்பாதடிக்கல் குவெஸ்டின்'.

திரு. ம. கமலநாதன் : இந்த ஹோகனக்கல் திட்டம் நிறைவேற் றப்பட்ட பிறகு அதில் ஒரு பகுதியை தென் பெண்ணாற்றுக்குத் திருப்பினால் கிருஷ்ணகிரிப் பகுதியில் இருக்கின்ற தண்ணீர்ப்

4th February 1966]

பஞ்சத்தை நிரந்தரமாகப் போக்கமுடியும். அதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தமாதிரிக் கருத்துக்களை இப்பொழுது தெரிவித்தால் ஆட்சேபனை அதிகமாகப் போய்விடும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மின்சாரப் பற்றுக்குறையைப்பற்றிச் சொல்லும்பொழுது அமைச்சர் அவர்கள் கடவுளைப் பொறுத்தது என்று சொன்னார்கள். அப்படியானால் கல்பாக்கத்தில் ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்தப்போவதாக சென்ற பட்ஜெட்டிலேயே கூறினார்கள். அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பூர்வாங்க நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பொறியியல்—தொழில் நுட்பக் கல்லூரி

* 93 கேள்வி.—**திரு. ஆ. துரையரசன்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றும், தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரி திறக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இம்மாநிலத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட விரைவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனல் இது பற்றிய முடிவு நான்காவது திட்டம் இறுதியாக உருவாக்கப்பட்ட பின்னரே எடுக்க முடியும்.

திரு. ஆ. துரையரசன் : தலைவரவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு தொழிற் கல்லூரி ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று கேட்டிருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ஜினியரிங் காலேஜ், காலேஜ் ஆப் டெக்னலஜி இரண்டும் ஒன்றுதான். அங்கத்தினர் அவர்கள் பாலிடெக்னிக் பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். பாலிடெக்னிக் சம்பந்தப்பட்டவரையில் 3, 4 புதிய பாலிடெக்னிக்குகள் திறக்கவேண்டுமென்று கோரியிருக்கிறோம். நான்காவது திட்டம் எந்த அளவிலே இருக்குமென்று இன்னும் முடிவு செய்யப்படாத காரணத்தினல் இதைப்பற்றித் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : என்ஜினியரிங் காலேஜ்கள் எந்த எந்த இடங்களில் எல்லாம் ஆரம்பிப்பதாக உத்தேசம் இருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எங்களுடைய சிபாரிசு இரண்டு இடங்களில். ஒன்று திருநெல்வேலியில்; மற்றொன்று தஞ்சாவூரில்.